## மின்னியல் முறையிலான மாதாந்திர உதவித் தொகை:

# பொருளாதாரத்தை மேம்படுத்தும்

கோலாலம்பூர், ஜூன் 18–

தேசிய மீட்சித் திட்டத்திற்கானக் கால கட்டம் முழுவதும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தக் குறிப்பிட்ட சாராருக்கு மின்னியல் முறையிலான மாதாந்திர உதவித் தொகையை அரசு வழங்க வேண்டும் என்று புத்ரா மலேசியப் பல்கலைக்கழகத்தின் (யூ.பி.எம்.) வர்த்தக மற்றும் பொருளாதாரப் பிரிவுக்கான முதிர்நிலைப் பேராசிரியர், டாக்டர் அனுவார் ஷா பாலி முகமட் வலியுறுத்தினார்.

இது உண்மையில் மக்களுக்குப் பேருதவியாக இருப்பது மட்டுமின்றி உள்நாட்டு வணிகர்களின் பொருளாதாரத்தையும் வலுப்படுத்தும். இதற்கு முன் ஒருமுறை மட்டுமே வழங்கியதை இனி மாதந்தோறும் வெ.200ஆக பி40 மற்றும் எம்40 மக்களுக்கும் கொடுத்து அதை அவர்கள் உணவு, அத்தியாவசியப் பொருட்களை வாங்கப் பயன்படுத்தினால் அப்பகுதியில் பொருளாதாரம் வலுப்பெறும் சாத்தியம் உள்ளது. எனினும், இந்நிதி உண்மையில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு மட்டுமே என்று உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும் என்று தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் டாக்டர் அனுவார் ஷா பாலி முகமட் குறிப்பிட்டார்.

பிரதமர், டான்ஸ்ரீ முகைதீன் யாசின் கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்த தேசிய மீட்சித் திட்டம் உண்மையில் வரும் ஆகஸ்ட் மாதத்தில் அமல்படுத்தப்படவிருக்கும் 2 மற்றும் 3ஆவதுக் கட்டத்தில் மட்டுமே நடப்புக்கு வரும். இக்கால மாற்றத்தில் சிறு மற்றும் நடுத்தர வணிகர்கள் நிலையாய் இருக்க வேண்டியது அவசியமாகும்.

இதன் அடிப்படையில் இந்த 2ஆம், 3ஆம் கட்டங்களில் அனைத்து மலேசியர்களுக்கும் தடுப்பூசிப் போடும் நடவடிக்கைச் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்படுவதை அரசு உறுதிச் செய்ய வேண்டும். இவர்களில் குறைந்தபட்சம் 40 விழுக்காட்டினர் தடுப்பூசிப் போட்டுக் கொண்டால் வணிகங்கள் திறக்கப்பட்டு பொருளாதாரத் துறைகள் மீண்டும் புத்துயிர் பெறும் வாய்ப்புக் காணப்படுகிறது என்று டாக்டர் அனுவார் ஷா பாலி முகமட் மேலும் கூறினார்.